சென்னை, விதைச்சான்று மற்றும் அங்க கச்சான்று இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் :முனைவர் எல்.சுரேஷ் , பி,எஸ்ஸி(விவ)., எம்.பி.ஏ., பி.எச்.டி.,

அ1/13987/2023 நாள் 20.03.2024

பொருள் பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் – தொகுதி IV-ன் கீழ் 24.7.2022 அன்று நடத்தப்பட்ட நேரடி தேர்வில் தேர்வாணையம் வாயிலாக இளநிலை உதவியாளர்(பிணையம் அற்றது) பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணி நியமனம் வழங்கும் பொருட்டு விதைச்சான்று மற்றும் அங்க கச்சான்று துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணை வரப்பெற்றது – பணி நியமன ஆணை வழங்கியது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக

பார்வை
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சென்னை-3 க.எண்.1919/PSD-D2/2023நாள் 2.9.2023
2. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செமுஆ. அநிபி.5/92705/2023, நாள் 8.12.2023
3. இவ்வியக்கக செமுஆ.அ.1/13987/2023(3), நாள் 13.12.2023

" " "

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 24.7.2022 அன்று நடத்தப்பட்ட (அறிவிக்கை எண்.07/2022, நாள் 30.3.2022) இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு நேரடி தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டு பார்வை 1-ல் கண்டுள்ள ஆணையின்படி வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட தெரிவாளருக்கு பார்வை 2-ல் கண்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் தற்காலிக அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் ரூ.19500-71900 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் பணி நியமனம் வழங்கும் பொருட்டு விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணை வரப்பெற்றது.

இதனைத் தொடர்ந்து பார்வை 3-ல் காணும் விவரப்படி கீழ்கண்டவாறு பணி நியமன ஆணை வழங்கி ஆணையிடப்பட்டது.

| வ. எண் | TNPSC No. | பதிவு எண் | பெயர் மற்றும் பதவி | அரசுப்பணியில் சேர்ந்த நாள் | பணிபுரிந்து வரும் அலுவலகம் |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 01. | 30 | 3402008261 | வே.சதீஸ்குமார், இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) | 18.12.2023 முற்பகல் | விதைச்சான்று மற்றும் அங்க கச்சான்று இயக்குநர் அலுவலகம், சென்னை-32 |

பார்வை 2-ல் கண்டுள்ள ஆணையில் வழங்கிய அறிவுரைகளின்படி அன்னவர் அரசுப்பணியில் சேர்ந்த 18.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை மாண்பமை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரை அமர்வில் இது தொடர்பாக நிலுவையில் உள்ள ரிட் மனுக்களின் மீது பிறப்பிக்கப்படும் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டதாகும். (The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Honourable High Court of Madras/Madurai Bench of the Honourable High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV (Group IV Services).

மேற்கண்ட பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடித்திட வேண்டும். அன்னவர் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவுசெய்து அதனைத் தொடர்ந்து தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணை வழங்கப்பட்ட பின்னரே 2-வது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகளை பெறத் தகுதியுடையவர் என ஆணையிடப்படுகிறது.

(ஒம்.) எல்.சுரேஷ்
விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று
இயக்குநர் (மு.கூ.பொ),சென்னை-32

பெறுநர்
திரு.வே.சதீஸ்குமார்,
இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)
இவ்வியக்ககம்.

நகல் ஆ1 பிரிவு – இவ்வியக்ககம்.
நகல் சென்னை, வேளாண்மை இயக்குநர், சென்னை.
(அநிபி.5 பிரிவு)

உத்தரவின்படி

கண்காணிப்பாளர்
20/3/2024